# காலங்களின் அடையாளங்கள்

## 1. அறிமுகம்

காலங்களின் அடையாளங்களை எப்படி கண்டு கொள்வது என்பது நமக்குத் தெரியும் . உதாரணமாக வானத்தில் கருமையான மேகங்கள் உருவாகும் போது மழை பெய்யப்போகிறது என்பது நமக்குத் தெரியும் . வானிலை ஆய்வு சேவைகள் பருவநிலை கணிப்புகளை அடிக்கடி வெளியிடுகின்றன . உயிர் இழப்பையும் ; சேதங்களையும் குறைக்கும்வண்ணம் தேவையான பாதுகாப்புகளை எடுக்கும்படி இப்படிச் செய்யப்படுகின்றது .

29/12/2001 தேதியன்று "Strait Times" தலைப்பின் கீழுள்ள நாளிதழின் பக்கம் 30-ல் நான் இந்தத் தலைப்பைப் படித்தேன், "பருவநிலை எச்சரிக்கை தாமதமாகத் தரப்பட்டது . அமெரிக்க நாட்டுக் கடற்படையின் இணையத்தளம், அதன் 'சூறாவளி -எச்சரிக்கை' பக்கத்தில், வெப்பமண்டலப் பகுதி காற்றழுத்தத்தைப் பற்றிய தகவலை தந்துள்ளது . இருப்பினும் , வானிலை ஆய்வு சேவைகள் ஒரு சாதாரண இடியுடன் கூடிய மழையையே முன் அறிவித்திருந்தது . பொதுமக்கள் வீட்டிலேயே தங்கவேண்டும் எனும் எச்சரிக்கை காற்றழுத்தம் ஓய்ந்தபின்னரே வெளிவந்தது . அது தாமதமான செய்தி அல்லவா? ஸ நேற்று ஏற்பட்ட பேரிடர் உண்டாக்கும் பருவநிலைக்குப் பதிலாக வழக்கமான இடியுடன் கூடிய மழை என்று அறிவிக்கவேண்டாம்."

இருப்பினும் , எல்லா தலைமுறைகளையும் சார்ந்த மக்களுக்கு முன்னதாகவே இயேசு தந்த பின்வரும் எச்சரிக்கை அடையாளங்களை எழுதும்படி இந்தச் சம்பவம் என்னைத் தூண்டியது . இந்தத் தீர்க்கதரிசனங்கள் (எச்சரிக்கைகள்) விரைவில் வரவிருக்கும் அபாயங்களில் இருந்து நம்மைப் பாதுகாப்பதற்காகத் தரப்பட்டவையாகும் . இந்த அபாயங்கள் இயேசு கிறிஸ்துவைத் தமது வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களின் மீது வரக்கூடியவை . ஏனவே இந்தத் தீர்க்கதரிசனங்கள் (எச்சரிக்கைகள்) மிகவும் முக்கியமானவையாகும் . ஏனெனில், அவை இயேசு கிறிஸ்துவைத் தமது வாழ்வின் கர்த்தராக ஏற்றுக் கொள்ள மறுக்கும் அனைவர் மீதும் அண்மையில் வரவிருக்கும் ஆபத்திலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்காகத் தரப்பட்டவையாகும் .

**(பின்வரும் வசனங்கள் யாவும் பரிசுத்த வேதாகமத்தின் மத்தேயு அதிகாரம் 24-லிருந்து எடுக்கப்பட்டவையாகும் ).**

வசனம் 3 ல், சீஷர்கள் இயேசுவை இவ்வாறு கேட்கின்றனர், உம்முடைய வருகைக்கும் , உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? இயேசு இவ்வாறு பதில் சொல்கிறார், ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள் . பின்வரும் சம்பவங்கள் பிரசவ வேதனையைப் போல இடம்பெற உள்ளன என்றும் அவர் மேலும் கூறினார் . அதாவது இந்தச் சம்பவங்கள், இயேசு கிறிஸ்து இறுதியாக வரும்வரை , தொடர்ந்தாற்போல அடுத்தடுத்து நடக்கும் நிலையிலும் முக்கியத்துவத்திலும் அதிகரிக்கும் .

**(இயேசு கிறிஸ்து , தேவகுமாரன் , கர்த்தர், மீட்பர், என்றெல்லாம் இயேசு பரிசுத்த வேதாகமத்தில் அழைக்கப்படுகிறார் .)**

குறிப்பு : எல்லை இல்லாத ஆண்டவரிடம் இருந்து வரும் ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் எப்போதும் நிறைவேறவேண்டும் . ஏனென்றால் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தையும் ஆண்டவர் அறிந்துள்ளார் . ஜோசியம் எல்லைக்குட்பட்ட மனிதனிடமிருந்து வருகிறது . மனிதனின் அறிவு குறுகியதாகும் . எனவே ஜோசியம் நிறைவேறுவது சாத்தியமான சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளது . அவற்றை நம்பமுடியாது .

## 2. இயேசு தமது இரண்டாம் வருகைக்கு முன் பின்வரும் சம்பவங்கள் நடக்கும் என்று முன்குறிப்பிட்டார்

**1). போலியான மேசியாக்களும் , கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்புவார்கள்ஏனெனில் ,** (வசனம் 5) "அநேகர் வந்து , என் நாமத்தைத் தரித்துக் கொண்டு : நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.
(வசனம் 11) "அநேகர் கள்ளத் தீர்க்கதரிகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள்." இயேசுவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டும் இன்னொரு அடையாளம் இது .

**2). யுத்தங்களும் யுத்தங்களைப் பற்றிய புரளிகளும்இதுவும்** , இயேசுவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டும் இன்னொரு அடையாளமாகும் (வசனங்கள் 6-8). இயேசு முன் அறிவித்தது போல, பின்வரும் பட்டியலில் இருந்து , ஆண்டுகள் போகப்போக யுத்தங்கள் அதிகரிப்பதை நாம் காணலாம்.பின்வரும் தகவல்கள் www.historyguy.com/war-list.html என்ற இணையத்தளத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும் :

| தேதி (கி.பி) | பெயர் | யுத்தங்களின் எண்ணம் |
|---|---|---|
| 1000-1500 (500yrs) | ஆங்கிலோ-பிரஞ்சு போர் | 18 |
| 1500-1900 (400yrs) | ஆங்கிலோ-பிரஞ்சு போர் | 52 |
| 1900-200 (100yrs) | தலையாய உலக யுத்தங்கள் | 160 |

நவீனக்காலப் போரில் பயன்படுத்தப்படும் நூதனமான யுத்தங்களினால் போரில்

உயிரிழந்தோர் காயமுற்றோர் ஆகியோரின் பட்டியல் அளவில் அதிகமாகிறது . இதை நாம் தினமும் செய்தித்தாள்களில் வாசிக்கலாம். உலக முழுவதும் நிறைய யுத்தங்கள் நடக்கின்றன. புதிய யுத்தங்களும் தொடங்குகின்றன. யுத்தங்களுக்கு அவசரமாக யுத்தமாகும் நாடுகளும் உள்ளன.

**3). பஞ்சங்கள்** பஞ்சங்களும் ஸ பல இடங்களில் உண்டாகும் ஸ" ( வசனம் 7). இது தற்போது உலக முழவதிலும் நிறைய நாடுகளில் ஏற்பட்டுள்ளது . எடுத்துக்காட்டாக வட கொரியா ஆப்பிரிக்காவிலுள்ள சில நாடுகள் , ஆப்கானிஸ்தான், ஈராக், இன்னும் பல நாடுகள் . செய்தித்தாள் அறிக்கைகளின்படி இதன் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றது . 8/2/2002 தினத்தின் “தலைப்பின் கீழுள்ள ” நாளிதழின் 14-ம் பக்கத்தில் உள்ள அறிக்கையைப் படிக்கவும் . “வறட்சியும் வெள்ளமும் உலகத்தைத் தாக்கவிருக்கிறது ஸ ‘எல் நினோ மீண்டும் வருகையளிக்கவிருக்கிறது . அதன் முழு பலத்தையும் வருகிற மாதங்களில் உணரலாம்.

**4). நிலநல்டுக்கங்கள்**

வசனங்கள் 6-8, “பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் . இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.” இயேசு தீர்க்கதரிசனம் உரைத்தது போல ஆண்டு தோறும் நிலநடுக்கங்களின் எண்ணிக்கையிலும் கடுமையிலும் அதிகரிப்பைக் காணமுடிகிறது . பின்வரும் தகவல்கள் www.neic.cr.usgs.gov/bulletin.html என்ற இணையத்தளத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும் : U.S. Geological Survey: National Earthquake Information Center

| தேதி (கி.பி) | நிலநடுக்கங்கின் எண்ணிக்கை | மரித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1000-1500 (500yrs) | 6 | 286,000 |
| 1599-1800 (300yrs) | 10 | 1,500,000 |
| 1800-1900 (100yrs) | 14 | 179,103 |
| 1900-2000 (100yrs) | 103 | 1,824,857 |
| 2000-2001 (1yr) | இன்னும் அறிவிக்கவில்லை | |

**5). நீங்கள் கைதுசெய்யப்படுவீர்கள் , உபத்திரவப்படுவீர்கள் , கொலை செய்யப்படுவீர்கள்**

(மத்தேயு 24:9). “அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக் கொடுத்து , உங்களைக் கொலைசெய்வார்கள் என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள .” இது நடக்கும் போது ஒருவரும் ஆச்சரியமடையவேண்டியதில்லை ஏனெனில் இயேசு முன்னதாகவே நம்மை எச்சரித்துவிட்டார் . அவர் சொன்னார் (மத்தேயு 5:11-12; “என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி , பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.” யோவான்16:2-3). “உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும் ” இயேசுவின் இரண்டாம் வருகையை நாம் நெருங்கி செல்லும் போது இந்த உபத்திரவங்கள் மேலும் கடுமையாகும் .

**6). அநேகர் கிறிஸ்துவிடமிருந்து விலகி ஒருவரை யொருவர் காட்டிக் கொடுத்து வெறுப்பு கொள்வார்கள்**

(மத்தேயு 24:10). உபத்திரவமானது கடுமையாகும் போது உபத்திரவம் செய்வோரிடம் சிலாக்கியம் பெறும்படி இயேசுவை மறுதலித்து மற்ற கிறிஸ்துவர்களை வெறுத்துக் காட்டிக் கொடுக்கும் மனப்போக்கு உண்டாகும் . இயேசுவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டும் இன்னொரு அடையாளம் இது . ஆயினும் ஆண்டவர் கிறிஸ்துவர்களுக்கு இவ்வாறு வாக்களித்துள்ளார் , (ரோமர் 8:35-39).

**7). ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமை எங்கும் பரவி இருக்கும்**

(மத்தேயு 24:12-13) ”அசுத்தமுள்ளவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும் , நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும் , பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் ” (வெளி 22:11).

**8). இயேசுவைப் பற்றிய செய்தி உலக முழுவதும் பிரசங்கிக்கப்படும்**

( மத்தேயு 24:14; யோவான்14:29).

## 3. இயேசு ஏன் இவைகளை தீர்க்கதரிசனமாய் உரைத்தார்?

- அப்போதுதான் அவை நடக்கும் போது நாம் ஆச்சரியம் அடையமாட்டோம் அதோடு, சில அறிவாளிகளின் தவறான வியாக்கியானத்தினால் நாம் வழிதவறிவிடமாட் டோம்
- இவை நிறைவேறும் போது அது இயேசுவே உண்மையான மேசியா என்பதையும் அவர் வாக்களித்த அவரது இரண்டாம் வருகை சமீபத்தில் உள்ளது என்பதையும் நிரூபிக்கும் .
- நாம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் (சுவிசேஷம் என்பது வேதத்தில் உள்ள மத்தேயு , மாற்கு , லூக்கா , யோவான் எனும் புத்தகங்களைக் குறிக்கும் ) கேட்கும் போது நாம் நமது

பாவங்களிலிருந்து மனந்திரும்பி அவரை நமது இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக் கொள்ளலாம்

- அவர் நம்மை அவருடன் என்றென்றும் வாழும்படி பரலோகத்துக்கு எடுத்துச்செல்லும்படி நாம் அவருக்காக ஆவலுடன் காத்திருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார் . பரிசுத்த வேதாகமம் சொல்கிறது, அவருக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இயேசு மறுபடியும் திரும்ப வருவார் . (எபிரெயர் 9:27-28).அவருக்காக் காத்துக் கொண்டிருப்பதைப் போல் நீங்களும் ஒருவராக இருக்க விரும்புகிறீர்களா ?
- ஆம், அவர்களைப்போல இருப்பதற்கு நானும் விரும்புகிறேன .

உங்கள் ஒரவேளை கேடகலாம்: “கிறிஸ்துவை நான் ஏப்படி ஏற்றுக் கொள்வது?” என்று நீங்கள கேட்கலாம்.டதாகும் :